# கூத்துக் கலைஞர் கலையார்வன் கு. இராயப்பு

ஆழித்து முத்துக்கள் 107

- தெளிவத்தை ஜோசப் -

## குருநகர் தந்த கூத்துக் கலைஞர் கலையார்வன் கு. இராயப்பு:

எழுத்துவடிவில் அல்லாது அரங்க அளிக்கையூடாகவே முழுமை பெறுகின்ற ஒரு கலை வடிவம் கூத்து. அரங்க அளிக்கைகள் அரிதாகி கூத்துக்கள் பேணப்படாத நிலையில் அவை அழிவுறும் நிலைக்குத் தள்ளப்படுவதுண்டு.

கூத்துக்கள் வடமோடி, தென்மோடி என்று



அவைகளின் இயல்பு சார்ந்து அழைக்கப்படுவதுண்டு. இப்படியான கூத்துக்கலையை வாழ்வியல் ஓர் அம்சமாகவே பேணி வருகின்ற ஒரு கத்தோலிக்கக் கிராமமாகத் திகழ்வது குருநகர்.

குருநகர் கிராமத்தில் குருசுமுத்து – சிசிலியா தம்பதிகளின் நான்காவது மகனாக 11.10.1949ல் பிறந்தவர் குருசுமுத்து இராயப்பு அவர்கள்.

குருநகர் சென்.ஜேம்ஸ் கல்லூரியில் கல்வி கற்று (GCE O/L) படிப்பைத் தொடர முடியாத குடும்பச் சூழலில் தொழிலில் ஈடுபட்டார். கடற்றொழிலையே தனது ஆரம்பத் தொழிலாக மேற்கொண்ட இராயப்பு ஒரு கடின உழைப்பாளி. யாழ். மாநகர சபையின் சுகாதார மேற்பார்வையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

சிறு வயது முதலே வீட்டின் ஒரு மூலையில் விளக்கு வெளிச்சத்தில் நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு அரங்கம் இல்லாமலே நாடகம் நடித்துப் பழகியவர் இவர்.

மாணவ வயதில் (11 வயதில்) பாடசாலை மேடையேற்றிய கட்டபொம்மன் நாடகத்தில் ஜக்கம்மா என்னும் பெண் பாத்திரத்தில் நடித்ததன் மூலம் அரங்கப் பிரவேசம் செய்தவர் இவர் (1961).

1963ல் சேரன் செங்குட்டுவன் நாடகத்தில் சேரனாக நடித்துள்ளார். 1964ல் ஞான சவுந்தரி இசைநாடகத்திலும் பங்கேற்றுள்ளார்.

1965ல் பாடநூலில் இடம்பெற்றுள்ள ‘தர்மம் தலைகாக்கும்’ என்னும் கதைக்கு உரையாடல்கள் எழுதி மேடையேற்றி சிறந்த நாடகத்துக்கான பரிசினையும் பெற்றுக்கொண்டார்.

1966ல் வில்லியம் ஷேக்ஸ்பியர் அவர்களின் ‘ஹம்லெட்’ நாடகத்துக்கான தமிழ் உரையாடல்களை எழுதி தானே அதை நெறிப்படுத்தி மேடையேற்றியதுடன் ‘ஹம்லெட்’ பாத்திரமேற்றும் நடித்துள்ளார்.

கலைத்துறையில் குறிப்பாக அரங்கியல் துறையில் ஆர்வம் மிகக் கொண்டு பணியாற்றிவரும் கு. ராயப்பு அவர்கள் தனக்கென சூட்டிக் கொண்ட புனை பெயர் கலையார்வன் என்பது.

1982 வரையிலான ஒரு இருபதாண்டு காலத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியும் அதில் ஒரு சிலதை மேடை ஏற்றியும், சிலதை நெறியாள்கை செய்தும், ஒரு சிலதில் நடிகனாகப் பங்கேற்றும் கலைப் பணியாற்றியுள்ளார் கலையார்வன்.

இந்நாடகங்கள் இவருக்குப் பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றுக் கொடுத்துள்ளன.

ஒருசில நாடகங்கள் பல ஊர்களிலும், பல தடவைகளும் அரங்கேற்றப்பட்டுள்ளன.

1971 லிருந்து 1983 வரையான காலத்தில் திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தின் ‘பலிக்களம்’ வீடியோ நாடகம் உட்பட பல நாடகங்களில் சிறுசிறு பாத்திரங்கள் ஏற்று நடித்திருக்கின்றார்.

1983ல் புலம் பெயர்ந்து பிரான்சிலும் சுவிற்சர்லாந்திலுமாக ஒரு 20 வருடங்கள் வாழ்ந்திருந்தவர் கலையார்வன்.

புலம்பெயர்ந்து வாழ்ந்த நாடுகளிலும் தனது கலைப்பணிகளைத் தொடர்ந்தவர் இவர்.

சுவிஸில் ‘தமிழொலி’ வானொலிச் சேவையின் பொறுப்பாளராக இருந்து செயற்பட்டுள்ளார்.

‘யார் குற்றவாளி’, ‘நீதி தேவதை’ ஆகிய இரண்டு நாடகங்களை சுவிஸில் மேடையேற்றியுள்ளார்.

அத்துடன் தடுமாறும் சாஸ்திரங்கள் (1993), தமிழ்ச்சோலை (1994), அவலித்தின் ராகங்கள் (1995), கணிப்பொறி (WINOWS 98இல் செயலாற்றும் முறைகள் – 1998) என்னும் 4 நூல்களையும் சுவிஸில் வெளியிட்டுள்ளார்.

செல்வம் கொழிக்கின்ற மேலை நாடுகளில் ஒரு 20 வருடங்கள் போல் வாழ்ந்திருந்தாலும் 2001ல் மீண்டும் குருநகர் மண்ணின் மைந்தனாக ஊர் திரும்பி, ஊருடன் வாழ்கின்றவர்.

நாட்டின் யுத்த சூழலுக்குள் இயேசுவின் பிறப்பை உட்புகுத்திய ஒரு குறியீட்டு நாடகமான ‘புதிய பிறப்பு’, எயிட்ஸ் நோய் விழிப்புணர்வுக்கான மேடை நாடகமான ‘தண்டனை’, நாடகப் போட்டிக்காக எழுதப்பட்டு 2 ஆம் பரிசு பெற்ற ‘திருவிழா’ ஆகிய மூன்று நாடகங்கள் இவர் இலங்கை திரும்பியபின் அரங்கேற்றப்பட்டவை.

தான் பிறந்த கடலோரக் கிராமமான குருநகர் பற்றியதான இவருடைய தேடல்களும் பதிவுகளும் மிக முக்கியமானவை.

‘களம் தந்த களங்கம்’ என்னும் நூலை 2003ல் இவர் வெளியிட்டுள்ளார். குருநகர் நாட்டுக்கூத்துப் புலவர் சந்தியோகு அவர்களால் 1856ல் எழுதப்பட்ட ‘படைவெட்டு’ கூத்தின் புதிய வடிவமே இந்த நூல். இதுவே குருநகரில் வெளியான முதலாவது நாட்டுக் கூத்து நூல் என்று போற்றப்பட்டுள்ளது.

‘இராயப்பு வெளியிட்டுள்ள நூல் வரிசையில் அவரது ‘களம் தந்த களங்கம்’ என்னும் தென்மோடிக்கூத்துப் பதிப்பு மிகவும் முக்கியமானது. அருகிவரும் நாட்டுக்கூத்துக்கலைக்குப் புத்துயிர் அளிக்கும் செயற்பாடு இது. பழமையும் புதுமையும் கை கோர்க்கும் பல நாட்டுக்கூத்துக்களை எழுதியும் ஆடியும் பாதுகாத்த பெருமை குருநகர் மண்ணுக்குண்டு’ என்று பாராட்டுத் தெரிவிக்கின்றார் பேராசிரியர் சிவலிங்கராசா அவர்கள்.



‘குருநகர்கலைமாட்சி’ (2003), கடலலைகள் கொஞ்சும் நகர் - (2006), குருதிக் குளியல் (2007), ஆன்மீகத்தில் குருநகர் மக்கள் (2008) என்று இவருடைய நூல்கள் கடலலைகள் கொஞ்சும் குருநகரைப் பற்றிய தேடல்களே.

1983லிருந்து 1993 வரையிலான ஒரு பத்தாண்டு காலத்தில் குருநகர் மக்கள் அனுபவித்த மிகப் பெரும் அவலங்களை, யுத்தப் படுகொலைகளை ஒரு துயரக் காவியமாக வெளிக் கொண்டுவரும் நூல் குருதிக் குளியல். வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பரிசு பெற்ற நூல் குருதிக் குளியல் 2007.

‘களம் தந்த களங்கம்’ கூத்து நூலைத் தொடர்ந்து கூத்துக்களை இரவிரவாக ஆடி பார்வையாளர்களைக் களைப்படையச் செய்யா வண்ணம் சுருக்கியும் புதுப்பித்தும் வெளியிடும் இவரது பணி தொடர்ந்து செயலுரு பெற்று வருகிறது.

தன்னுடைய மணிவிழா ஆண்டான 2009ல் இவர் வெளியிட்ட நூல் கூத்துக்கள் 5.

ஐந்து கூத்து வடிவங்களை உள்ளடக்கியுள்ள இந்த நூல் தென்மோடிக்கூத்து மரபுக்கு ஒரு புதிய வரவாக அமைவதாகவும், பெருமளவில் கூத்துக்கள் வழக்கொழிந்து அழிந்து விடுமோ என்ற அச்சம் எழுகின்ற சூழலில் கலையார்வனின் இந்த முயற்சி நம்பிக்கை தருவதுடன் காலத்தின் தேவையாகவும் இருக்கிறது. அளிக்கையாளர்களுக்கு இந்த ஐந்து கூத்துக்களும் ஒரு புதிய வருகையாக முன் வைக்கப்பட்டுள்ளது என்றும் திருமறைக் காலமன்றப் பிரதி இயக்குனர் திரு யோன்சன் ராஜ்குமார் அவர்கள் இந்நூலுக்கான அணிந்துரையில் குறிக்கின்றார்.

2009 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரசின் சாகியத்திய விருது இந்த நூலுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.


குறுங்கூத்துக்கள் என்னும் இன்னொரு நூலினையும் கலையார்வன் 2011ல் வெளியிட்டுள்ளார்.

சகுந்தலை, அனார்க்கலி, காசியப்பன், மந்தரை சூழ்ச்சி, சங்கிலி செகராஜசேகரன் ஆகிய 5 தென்மோடி கூத்துக்கள், மேடையேற்றுதுக்கு ஏற்றவகையில் பாத்திரங்களின் உரையாடல்களுடன் இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

‘பழைய கூத்துக்களை அதுவும், சில கூத்துகளை மட்டும் திரும்பத்திரும்ப மேடையேற்றுவதால், மக்களிடையே ஏற்படும் சலிப்பைப் போக்கி இரசனையை ஏற்படுத்தும் வகையில் மாறுபட்ட வரலாற்றுக் கதைகளைக்கொண்ட புதிய கூத்துக்களை எழுதுவதன்மூலம் புதிய மேடையேற்றுதுக்கு சந்தர்ப்பம் அளிக்க முடியும் என்னும் நம்பிக்கை எனக்கு இருக்கிறது...’ என்கின்றார் கலைஞர் கு. இராயப்பு அவர்கள்.

நாற்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி அதில் இருபதுக்கு மேற்பட்ட நாடகங்களைத் தானே மேடையேற்றி, பதினைந்துக்கு மேற்பட்ட நாடகங்களைத் தானே நெறியாள்கை செய்து பத்து நாடகங்கள் அளவில் தானும் பாத்திரமேற்று நடித்து பழைய கூத்துக்களை எழுத்துருவில் பதிவு செய்தும், புதிய கூத்துக்கள் எழுதி நூலாக்கி அரங்கியல்துறைக்கு கலையார்வன் என்னும் குருநகர் கு. இராயப்பு அவர்கள் ஆற்றியுள்ள பணி காலத்தால் அழியாதது.

அரங்கியலுக்கு அப்பால் இலக்கியத்துறையிலும் ஒரு கவிஞனாக, ஒரு சிறுகதை எழுத்தாளனாக, உப்புக்காற்று 2012 நாவல் மூலமாக ஒரு நாவலாசிரியராகவும் பரிணமிக்கின்றார் இந்த அரங்கியல் கலைஞர்.



theliwathai.joseph@thaiveedu.com

## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**